ஆர்யகை ஞானமதி

# பேரழகர் பாகுபலி



வீரஞானோதய கிரந்தமாலை மலர் 53

பகவான் பாகுபலி ஆயிரம் ஆண்டு நிறைவு

மகாமஸ்தகாபிஷேக நினைவு வெளியீடு

# பேரழகர் பாகுபலி

ஆசிரியை

ஆர்யகாரத்ன ஞானமதி அம்மையார்

தமிழாக்கம் :

A. சிம்மசந்திர ஜைன் சாஸ்திரி

"காவ்யதீர்த்த சாஹித்ய ரத்னா"

வெளியிடுவோர் :

**திகம்பர ஜைன மூவுலக ஆய்வுக் கழகம்**

அஸ்தினாபுரம் (மீரட்) உ. பி.

முதற் பதிப்பு

விலை ரூ. 1.

திகம்பர ஜைன மூவுலக ஆய்வுக் கழகத்திற்குட்பட்ட

# வீரஞானோதய கிரந்தமாலை

இந்த கிரந்தமாலையின் வாயிலாக, திகம்பர ஜைன தத்துவத்தைச் செம்மையான வழியில் புரிந்துகொள்ள இந்தி, சமஸ்கிருதம், பிராகிருதம், கன்னடம், தமிழ், மராட்டி ஆகிய மொழிகளில் தர்கம், சித்தாந்தம், ஆன்மீகம், பூகோளம், வானியல், இலக்கணம் ஆகியன குறித்துப் பெரிய சிறிய நூல்கள் பல வெளியிடப்படுகின்றன. மேலும் வெவ்வேறு மொழிகளில் மொழி பெயர்த்து மக்களுக்குப் பயன்படக்கூடிய சிறு சிறு வெளியீடுகளாக அவற்றை வெளியிட்டு ஜைன அறம் பரப்பப்படுகிறது.

கிரந்தமாலையின் ஆசிரியர்

**மோதீசந்த் ஜைன்** சாஸ்திரி, நியாயதீர்த்த

**ரவீந்திரகுமார் ஜைன்,** B.A. சாஸ்திரி

பதிப்புரிமை பெற்றது.

கிரிதர் ஆர்ட் பிரிண்டர்ஸ், 47, பத்திரியன் தெரு, சென்னை-1

# முன்னுரை

ஓராயிரம் ஆண்டு காலமாக வசந்தம் மழை மற்றும் குளிர் ஆகிய பருவங்களில் இயற்கை இன்னல் களைப் பொறுத்துக்கொண்டு விந்தியகிரியின் உச்சி யில் நிலைத்திருக்கும் விசாலமான படிமையைத் தவத் திரு ஸ்ரீ நேமிசந்திர சித்தாந்த சக்ரவர்த்தி அவர்கள் முன்னிலையில், கங்கவமிசத்து மன்னரின் படைத்தலை வராகவும் அமைச்சராகவும் இருந்த சாமுண்ட ராயர் கி. பி. 981-ல் நிறுவினார். அப்புனிதப் படிமையின் ஆயிரம் ஆண்டு நிறைவு மகாமஸ்தகாபி ஷேகப் பெருவிழா கி. பி. 1981-ல் பாரதம் மற்றும் பல்வேறு வெளிநாடுகளுடன் தொடர்புகொண்டு நடைபெற இருக்கிறது.

பகவான் பாகுபலி இந்த யுகத்து முதல் பேரழகரா (காமதேவ) கவும் முதன் முதலில் முக்திபெற்ற சிறந்த சித்த புருடராகவும் இருந்தார். இவருடைய தந்தை யான பகவான் விரஷப தேவர் ஓராயிரம் ஆண்டு காலம் தவம் செய்து வாலறிவு பெற்று பல ஆண்டு காலத்திற்குப் பிறகு முக்தி பெற்றார். ஆனால் பகவான் பாகுபலி கடும் தவம் புரிந்து வாலறிவு பெற்று ஆங் காங்கு அற மாரி பொழிந்து அவருக்கு முன்னே முக்தி பெற்றுவிட்டார். இவர் அதிக பலம் வாய்ந்தவராகவும் ஒளிமயமான உடலமைப்பைப் பெற்றவராகவும் வர லாற்று புருடராகவும் விளங்கினார். இவருடைய

பக்திக்கு கட்டுண்ட மாமனிதனால் நிறுவப்பட்ட 57 அடி உயரமான கற்படிமை மைசூர் மாநகரத்திற்கு அருகில் உள்ள ஸ்ரவண பெளிகுளம் என்னும் இடத்தில் 1000 ஆண்டுகளுக்கு முன்பு நிறுவப்பட்டது. இப்படிமை கலை, வரலாறு, தூய்மை, பற்றற்றதன்மை ஆகியவற்றை விளக்கிக்கூறும் உயிருள்ள உருவம் போன்று காட்சி அளிக்கிறது. ஆண்டு தோறும் இங்கு வரும் லட்சக்கணக்கான உள்நாட்டு வெளிநாட்டு யாத்திரீகர்கள் இப்படிமையைத் தரிசித்து தமது வாழ்க்கையில் வெற்றியடைந்தவராகக் கருதுகின்றனர்.

ஆயிரம் ஆண்டு நிறைவுப் பெருவிழாவின் பிரசாரத்திற்காக 1980-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 29-ம் நாள் டில்லியில் மாண்புமிகு பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் ஜன மங்கள மகா கலச சுற்றுலாவைத் துவக்கி வைத்து உரையாற்றியபோது, "நான் இளம் வயதில் என் தந்தையாருடன் சிரவண பெளிகுளம் சென்றிருந்தேன். அப்பொழுது அப்படிமையைத் தரிசித்துப் பெரும் திருப்தியடைந்தேன். மேலும் 1981-ல் நடைபெற இருக்கும் மகா மஸ்தகாபிஷேக நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைக்குமாயின் அதை என் வாழ்க்கையில் கிடைத்த பெரும் பாக்கியமாகவே கருதுவேன்" என்றார்.

விக்கிரம ஆண்டு 2022 (கி. பி. 1965)-ல் ஆர்யகா ரத்ன ஞானமதி அம்மையார் அவர்கள் கோமடேச பகவான் பாகுபலி சுவாமி சிலை எதிரில் அமர்ந்து ஒரு ஆண்டுவரை தியான உபாசனை புரிந்தார்.

அவ்வாண்டு முதல் அம்மையார் அவர்கள் நூல் எழுதும் பணியினைத் துவங்கினார். இன்றுவரை அம்மையார் அவர்களின் திருக்கரத்தின் மூலம் இயற்றப்பட்ட அநேக பெரிய சிறிய நூல்கள் வெளிவந்துள்ளன. இப்பொழுது பகவான் பாகுபலி சுவாமி வாழ்க்கை வரலாற்றைக்கொண்டு "யோக சக்ரேஸ்வர பாகுபலி" என்னும் புத்தகத்தை அம்மையர்ர் அவர்கள் எழுதினார். அது அச்சாகி 1980-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 29-ம் நாள் சிரவணபெளிகுளம் பூஜ்ய பட்டாரக சுவாமியார் அவர்களால் தில்லி மாநகரத்தில் வெளியிடப்பட்டது. அப் புத்தகம் இயற்றிய பிறகு "காமதேவ (பேரழகர்) பாகுபலி" என்னும் இச் சிறிய புத்தகம் எழுதப்பட்டது. இது பகவான் பாகுபலியின் முழு வரலாற்றினையும் கொண்டதாகும். இப் புத்தகத்தை இந்தி, ஆங்கிலம், மராட்டி, கன்னடம், குஜராத்தி, வங்காளம், தமிழ் ஆகிய மொழிகளில் மொழி பெயர்த்து வெளியிட்டுப் பகவான் பாகுபலி சுவாமியின் லட்சியங்களை மக்கள் உணரும் வண்ணம் செய்ய முயற்சிக்கப்படுகிறது. புத்தகத்தைப் படித்து ஜைனர்களும் ஜைனரல்லாதாரும் பகவான் பாகுபலி சுவாமியின் அகிம்சையை அடிப்படையாகக் கொண்ட லட்சியங்களைத் தமது வாழ்க்கையில் கடைபிடிப்பார்களானால் இப் புத்தகம் வெளியிட்டதின் மாபெரும் பலனைப் பெற்றதாகக் கருதுவோம்.

இங்ஙனம்,

**ரவீந்திரகுமார் ஜைன்.**

★

# ஆர்யகாரத்ன ஞானமதி அம்மையார் வாழ்க்கை வரலாறு

நியாய பிரபாகர் சித்தாந்த வாசஸ்பதி என்னும் சிறப்புப் பெயரைப் பெற்ற ஆர்யகாரத்ன ஞானமதி அம்மையார் அவர்கள் ஜைன சமூகத்தில் பெயர் பெற்ற எழுத்தாளராகவும் சிந்தனை சிற்பியாகவும் இயற்பொருள்களின் இயல்பினை விளக்கும் இணை யற்ற வித்தகராகவும் விளங்குகிறார். இவர் தம்முடைய வாழ்நாளில் இளம் வயது முதற்கொண்டு இன்று வரை ஜைன இலக்கியம் இலக்கணம் சித்தாந்தம் ஆகிய நூல்களை இயற்றுவதிலேயே கழித்து வருகிறார்.

இவர் கி.பி. 1934-ம் ஆண்டு உத்தரப் பிரதேசத் திலுள்ள டிகைத் நகர் மாவட்டத்தைச் சார்ந்த பாரா பங்கி என்னும் இடத்தில் பிறந்தார் இவர் தந்தையார் பெயர், சோடேலால் ஜைன் தாயார் பெயர் மோஹினி தேவி இவர் இப்பொழுது துறவு பூண்டு ஆர்யகா ரத்னமதிஜீ என அழைக்கப்படுகிறார்.

அம்மையார் அவர்கள் தமது 17-வது வயதில் பால பிரம்மசர்ய விரதம் பூண்டு திகம்பர ஜைன ஆர்யகா துறவறத்தில் ஒழுகலானார். விரதம் பூண்ட பிறகு இவர் செய்த ஆன்மீக உபாசனையும் அறிவின் ஆற்றலும் ஜைன சமூகத்தில் ஒப்பற்றதாகும். இது வரை இவர் அஷ்டசகஸ்ரீ நியமசாரம் இலக்கணம் ஆகிய உயர்ந்த நூல்களுக்கு இந்தியில் உரை எழுதி

யுள்ளார். மேலும் பல நூல்களை கவிதைவடிவிலும் மொழிபெயர்த்தும் மற்றும் பல துதிகளையும் இந்தி சமஸ்கிருதம் கன்னடம் ஆகிய மொழிகளிலும் இயற்றி யுள்ளார் இவை இப்பொழுது வெளியிடப்பட்டு வருகின்றன. இவருடைய எழுதுகோலும் சொற் பொழிவும் சிறந்த திறமை பெற்றவை மேலும் இவரு டைய தூண்டுதலால் ஏற்படும் பணிகளும் ஜைன அறப் பிரசாரமும் வல்லமை பெற்று சிறப்பு மிக்க வரலாற்று அம்சமாக அமைந்து நிலைத்து செயல் படும் செயலாகவும் இருந்து ஜைன சமூகத்திற்கும் மட்டுமல்லாமல் ஜைனரல்லாதார் சமூகத்திற்கும் கலங்கரை விளக்கம்போன்று காட்சியளிக்கின்றன.

இச்சிறிய புத்தகத்தில் அம்மையாருடைய வாழ்க்கை வரலாற்றினை விளக்கமாக எழுதுவது இயலாது ஆனால் அவருடைய வாழ்நாள் முழுதும் ஜைன அறம் ஜைன கலாசாரம் ஆன்மீக சாதனை ஆகிய பணிகளுக்கே அர்ப்பணிக்கப்பட்டுள்ளது என்பதை மட்டும் கூறமுடியும். ஜைன சமூகம் அம்மையார் அவர்களின் அரிய செயல்களைக் கண்டு பெருமைப்படுகிறது.

இங்ஙனம்,

**மோதீசந்த் ஜைன்**

# நன்றியுரை

இத்தீக் காலத்தில் ஞானக்கண் திறப்பதற்காக இரண்டே சாதனங்கள்தான் உள்ளன. அவற்றுள் ஒன்று அறநூல் இரண்டாவது துறவிகளின் தொடர்பு இதிலும் பற்றற்ற துறவிகள் தொடர்பு கிடைப்பது மிகக் கடினம். அறநூல் களை சமூகத்திலுள்ள ஒவ்வொரு இல்லறத்தாருக்கும் கிடைக்கப் பெறச் செய்ய வேண்டுமானால் அதற்கு உதார குணம் படைத்த செல்வந்தர்கள் இப் பணியில் தமது ஆர்வத்தைச் செலுத்துதல் வேண்டும்.

இல்லறத்தாரில் தலைசிறந்தவரும் ஜைன அறப்பற் றுள்ளவரும் வீதராக ஒழுக்க நெறிகளில் ஒழுகுபவரும் சீதாபூர் வாசியுமாகிய திரு நிர்மலகுமார்ஜி அவர்கள் தமது தந்தை யார் அவர்கள் காட்டிய அடிச்சுவட்டில் சென்று அறத்தின் அடிப்படைக் கொள்கைகளை நன்கு உணர்ந்தவர், இவ ருடைய குடும்பத்தினரும்கூட ஜைன அற நூல்களை வெளி யிட்டு வழங்கும் பணியிலும் ஜைன கலாசாரப் பண்புகளை பரப்புவதிலும் ஒருமித்த கருத்துகொண்டு ஒழுகுபவர் ஆவர். இவர் ஒரு தொழிலதிபர் இவருடைய தொழிற்கூடங்கள் பார தத்தில் அங்குமிங்கும் பரவி செயல்பட்டு வருகின்றன. இத் தொழிற்சாலைகளை நடத்துவதில் அதிக ஆர்வமும் ஈடுபாடும் இவர் கொண்டிருந்தபோதிலும் இச்செல்வந்தர் ஜைன அறத் தைப் பரப்புவதிலும் துறவிகளுக்கு தொண்டு புரிவதிலும் தமது நேரத்தை அதிக அளவு செலுத்திவருகிறார். இவருடைய சகோதரர்களாகிய திரு உலாசசந்த்ஜீ ஜைன். திரு மகாவீர பிரசாத்ஜீ ஜைன், திரு திநேசசந்த்ஜீ ஜைன் ஆகியோர்

களும்கூட தமது தந்தையார் மூலம் கிடைக்கப்பெற்ற அறப் பற்றினை அதிகரிக்கும் பணியில் ஈடுபாடு கொண்டு தமது பரந்த தொழிற் கூடங்களையும் நடத்தி வருகின்றனர். தற்போது திரு நிர்மலகுமார் சேட்டி அவர்கள் உத்திர பிரதேச ரோலர் ப்லோர் மில் அசோசியேசன் தலைவராகவும் உத்தரபிரதேச திகம்பர ஜைன தீர்த்த சேத்ர கமிட்டியின் முக்கிய செயலாளராகவும் மற்றும் காகந்தி, பாவாநகர் ஆகிய புனிதத் திருத்தலக் கமிட்டியின் காப்பாளராகவும் இருந்து அறத்திற்கும் சமூகத்திற்கும் பெரும் தொண்டு புரிந்து வருகிருர். இவர் ஆர்யகாரத்ன ஞானமதி அம்மையாரின் அறவுரைகளை கேட்ட பிறகு ஜினவாணி பிரசாரம் செய்யவேண்டுமென்கிற பேராவல் கொண்டவராகவும் தமது வாழ்க்கையில் செய்யும் பெரும் பணி இதுவே என உணர்ந்தார். தற்போது திகம்பர ஜைன மூவுலகு ஆய்வுக் கழகத்தின் புத்தக வெளியீட்டுப் பணியில் இவருடைய பொருளுதவியும் வல்லமை பொருந்திய குருபக்தியும் உள்ளடங்கியுள்ளன. இவருடைய உதார குணங்களின் வாயிலாக இப் புத்தகம் வெளியிட்டு குறைந்த விலையில் விற்கவும் இப் புனிதப் பணியினை தொடர்ந்து செயல் படவும் துணை புரிந்து புத்துணர்ச்சி உண்டாக்கிய சிறப்பு இவரையே சாரும். பேருதவி புரிந்த திரு நிர்மலகுமார் சேட்டி அவர்களுக்கு உளம் கலந்த நன்றியை செலுத்துகிறேன்.

**ஆசிரியர்**

# ஸ்ரீ பாகுபலி அஷ்டகம்

இயற்றியவர் ஆர்காரத்ன **ஞானமதி அம்மாள்**

1. சித்திப்ரதம் முனிகணேந்த்ர சதேந்த்ர வந்த்யம்
கல்பத்ருமம் சுபகரம் த்ருதிகீர்த்தி சங்கம்
பாபாபஹம் பவப்ருதாம் ப்பவ வார்த்தி போத
மானம்ய பாதயுகலம் புருதேவ சூநோ :

2. சப்தத் விசாலி கணிநாம் ஸ்துதிகோசரஸ்ய
யுத்தத்ரயே விஜித விக்ரம சக்ரபஸ்ய
த்யானைகலீந தநுநிஸ்சல வத்சரஸ்ய
தஸ்ய ப்ரபோ ரஹமபி ஸ்தவநம் விதாஸ்யே

3. ஹே காமதேவ சுபவர்ண ஹரித் சுகாத்ர
கேநோபமாம் தவகரோமி சமோபி கஸ்சேத்
நூநம் ப்பவான் க்கலு ப்பவாத்ருச ஏவலோகே
த்ருஷ்யந்தி நோ ஜனத்ருசோ முஹு பரீக்ஷமாண:

4. த்யானஸ்திதே த்வயி விபோ சுகவர்ணகாந்தம்
த்வாம் வீக்ஷ்ய முக்தி லலநா ச்சலதோ லதாநாம்
மந்யேஹமேத்ய சமவர்ணபவேத்ய துஷ்டா
ஆஸ்லிஷ்ய திஸ்ம ரஹசி ஸ்திதமத்ர மோதாத்

5. விக்நௌக ஜித் மரகதாப சமந்த தஸ்த்வாம்
சம்வேஷ்ட்ய பீஷணப்பணா விஷதர்ப்ப ஜுஷ்டா
வல்மீக ரந்த்ரகத நிர்கத க்ருஷ்ண நாகா:
தீர்க்கம் த்வதீய ப்ருது தேஹ கிராவதீவ்யன்

6. உத்துங்கதேஹ ! பரதாதிபஜித் தவப்ராக்
சிஷ்யோ பபூவ பரதேஸ்வர சக்ரரத்னம்
ரத்னத்ரயம் புநரவாப்ய சுசித்தி சக்ரம்
மோஹைகஜித் த்ரிபுவநைக குருர்பபூவ.

7. சம்யகத்வதாம் ப்ரதிக்ருதிம் தவ யே ப்ருதிவ்யாம்
நிர்மாபயந்தி ஜிநபுங்சுவ பக்திபாஜ :
தன்யாஸ்த ஏவ புவனத்ரய க்ஷோபகாரி
பத்னந்தி தீர்த்தகர புண்யமஹோ கிமன்யை

8. சுக்ஞானவீர்ய சுகதர்சன நாந்த்யரூப
கைவல்ய லோசன ! விராக ! ஹிதாநுசாஸ்த :
ஹே சித்திகாந்த ஜிந பாகுபலீச தேவ !
ஸ்ரீ கோமடேச தவபாதயுகம் ப்ரவந்தே.

9. ய: படேத் சததம் பக்த்யா
புருதேவாத்ம ஜாஷ்டகம்
ஸ்வாத்ம க்ஞானவதீம் சித்திம்
ச லபேதாபுநர்பவாம்.

ஆர்யிகை ஞானமதி

# பேரழகர் பாகுபலி

# பேரழகர் பாகுபலி

## ஆறு கண்டத்தை வென்றவரை வென்ற பாகுபலி :

பேரரசனாகிய நாபி மன்னன் பகவான் ரிஷப தேவரிடம் சென்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார் :

"ஏ தேவ! நீங்கள் உலகத்திற்குத் தலைவர். நீங்கள் யுகாதி புருஷன். ஆதலால் நீங்களே நான்முகன் (பிரம்மா)! நீங்களே ஞானி! நீங்கள் பிறப்பதற்கு நான் நிமித்த மட்டும் தான். என்றாலும் நான் உங்களிடம் வேண்டுவது ஒன்று உண்டு. நீங்கள் இப்பொழுது இன்பங்களை அனுபவிக்க இல்லறத்தில் பற்றுக்கொள்ள வேண்டும். உலக மக்கள் உங்களைப் பின்பற்றும் நிலையில் உள்ளனர். ஆதலால் நீங்கள் விரும்பிய பெண்மணியைத் திருமணம் செய்து கொள்ள இசைய வேண்டும். திருமண நல்வாழ்வை நீங்கள் தவறாது ஏற்கவேண்டும்." விரஷபதேவர் "ஓம்" எனக்கூறி தந்தையாரின் மொழியினை ஏற்றுக்கொள்கிறார். அப்பொழுது தேவேந்திரன் அனுமதி பெற்று நாபி மன்னர் கச்ச மகா கச்ச நாட்டு மன்னர்களின் சகோதரியாகிய **யசஸ்வதி** மற்றும் **சுனந்தை**யுடன் விரஷப தேவரின் திருமண விழாவை மிகச் சிறப்பாக நடத்திவைக்கிறார்.

## பேரழகர் பாகுபலி பிறப்பு :

விரஷப தேவர் இல்லறத்தில் இனிது இன்புற்று வாழும் காலத்தில் நல்வினையின் பயனால் 'யசஸ்வதி தேவியான வள் **பரதன்** விருஷபசேனன் முதலாக தொண்ணூற்று ஒன்பது திருக் குமாரர்களையும் பிராமீ எனும் ஒரு குமாரத்தியையும் ஈன்றெடுத்தாள். சுனந்தா தேவி பேரழக னாகிய பாகுபலி குமாரனையும் சுந்தரி என்னும்

திருமகளையும் ஈன்றெடுத்தாள். விருஷபதேவர் இந்தத் திருமகள்களுக்கும் பிள்ளைகளுக்கும் தானே நற்பண்புகளைப் புகட்டி நூல் அறிவு, கலை, விஞ்ஞானம், பொருளாதாரம், காமநூல், இரத்தின ஆய்வு அறிவு, ஓவியக் கலை, கட்டடக் கலை ஆகிய எல்லா கலைகளிலும் எல்லா புதல்வர்களையும் திறமை மிக்கவர்களாக ஆக்கினார்.

### பௌதனபுர அரசு :

விரஷபதேவர் தம் வாழ்க்கையில் இன்பத்தை அனுபவிக்கும் வேளையில் முக்திப் பாதையில் முன்னேற வேண்டுமென்கிற எண்ணம்கொண்டு ஜினதீட்சைப் பெற முற்பட்ட போது தனது மூத்த குமாரனாகிய பரதனை சக்கரவர்த்தி பதவியில் அமர்த்தி பாகுபலி குமாரனை இளவரசனாக நியமித்து இவருக்கு பௌதனபுரம் என்னும் இராஜ்யத்தை வழங்கினார். மற்ற தொண்ணூற்று ஒன்பது மைந்தர்களுக்கும் அவரவர் திறமைக்குத் தக்கவாறு வெவ்வேறு நாடுகளை அளித்து தானும் தீட்சைப் பெற்று துறவு மேற்கொண்டு துறவற விதிமுறைகளை மக்களுக்கு அறிவுறுத்தலானார். விரஷபதேவர் தவம் செய்து வினையினை வெல்லும் தவத்தில் ஈடுபாடுகொண்டுள்ளார். பரதன், பாகுபலி, விரஷபசேனர், அனந்தவிரியர் ஆகிய புதல்வர்கள் அனைவரும் தந்தையின் கட்டளைக்கு இணங்க நீதி நேர்மையுடன் ஆட்சி செய்து நாட்டுமக்களை தம் புதல்வர்களைப்போன்று கருதி காப்பாற்றி வந்தனர்.

### பரதனின் சக்கரவர்த்தி பதவி :

ஒருநாள் பரத சக்கரவர்த்தி அவையில் வீற்றிருக்கும் போது மூன்று செய்தியாளர்கள் வந்து முறையே கீழ்கண்டவாறு கூறலாயினர்: "பிரபுவே! உங்கள் தந்தையாராகிய விரஷபதேவருக்கு கேவல ஞானம் (வாலறிவு) ஏற்பட்டுள்ளது. ஏ சுவாமி! உங்கள் ஆயுத சாலையில் 'சக்கர ரத்தினம்' தோன்றியுள்ளது. ஏ! மன்னர் மன்னனே! உங்கள் அந்தப்புரத்தில்

ரத்தினத்திற்கு ஒப்பான புத்திரன் பிறந்துள்ளான்! இம் மூன்று நற்செய்திகளையும் ஒருங்கே கேட்ட பரத சக்கரவர்த்தி முதன்முதலில் எந்த விழாவினைக் கொண்டாட வேண்டு மென்று எண்ணி முதன்முதலில் பகவான் சமவசரணத்தை அடைந்து வாலறிவு பெற்ற பகவானை வணங்கி வழிபட வேண்டும். இதுவே அறம். சக்ரரத்தினம் பொருள் புருஷார்த் தத்தின் பலன். புத்திர ரத்தினம் இன்ப புருஷார்த்தத்தின் பலன் இவ்விரண்டும் அறமென்னும் பூங்காவின் கனிகளைப் போன்றவை. ஆதலால் முதன் முதலில் அற விழா வினைக் கொண்டாடுவதே சாலச் சிறந்தது!'' என முடிவு கொண்டார்.

பரத சக்கரவர்த்தி முதன் முதலில் பகவான் ரிஷபதேவர் சமவ சரணம் அடைந்து ஆனந்தத்துடன் பூஜை. தோத் திரம் ஆகியவற்றை செய்து அறவுரைக்கேட்டு பின் அரண் மனை அடைந்தார். பிறகு 'சக்கர ரத்தின'த்திற்கு பூஜை செய்து மகப்பேறு விழாவினையும் கொண்டாடினார். பின்னர் நல்ல முகூர்த்தநாள் பார்த்து (நாட்டை வெல் வதற்கு) திக் விஜயத்திற்குப் புறப்பட்டார்.

**திக்விஜம் முழுமை பெறவில்லை:**

திக்விஜயத்திற்குப் புறப்பட்ட பரத சக்கரவர்த்தி அறுபது ஆயிரம் ஆண்டுவரை ஆறு கண்டங்களையும் சுற்றி அங்காங்கே ஆண்டு வந்த நாட்டு மன்னர்களை எல்லாம் வென்று வெற்றி முரசு கொட்டிக்கொண்டு அயோத்தி மாநகரத்திற்குத் திரும்பிக்கொண்டிருக்கும்போது, 'மன்னர் மன்னரே! சக்கர ரத்தினம் அயோத்தி மாநகர கோபுர வாயிலில் நின்றுவிட்டது. இதனால் நீங்கள் வெல்லுவதற்கு இன்னும் வேறு யாரோ இருப்பதுபோல் தெரிகிறது' என ஓர் அறிவிப்பு திடீரென வந்தது.

அரசு புரோகிதன் வாயிலாக இதற்கு விளக்கம் பெற்ற சக்கரவர்த்தி ஆலோசிக்கலானார்: 'ஆமாம்! நான் சக்ரவர்த்தி

யானேன். ஆனால் என் உடன் பிறந்த சகோதரர்கள் என்னைச் சக்கரவர்த்தியென ஏற்று என்னை வணங்க வில்லை' என நினைத்து, தன்னுடைய தூதுவனை அனந்த வீரியர் முதலாகிய தொண்ணூற்றெட்டு சகோதரர்களிடம் அனுப்புகிறார். அப்பொழுது அவர்கள் எல்லோரும் பகவான் ரிஷபதேவரிடம் சென்று தம் மானத்தைக் காப்பாற்ற நினைத்து ஜைன துறவு மேற்கொள்ளுகின்றனர்.1

இச்செய்தியை அறிந்த பரத சக்கரவர்த்தி மனவருத்தம் கொள்ளுகிறார். பிறகு மற்றொரு தூதுவனைப் பாகுபலி யிடம் அனுப்புகிறார். தூதுவன் பாகுபலியிடம் சென்று அவரை வணங்கி நலம் விசாரித்து நாட்டில் நிகழும் நன்மை தீமையினைப் பேசி சக்கரவர்த்தி நிகழ்த்திய திக்விஜயத்தை விளக்கிப் பேசிய பிறகு தான் கொண்டுவந்த செய்தியை விளக்கலானான். "ஏ பிரபுவே! பரத மாமன்னன் இட்சு வாகு வமிசத்தில் பிறந்தவர். பகவான் விரஷபதேவரின் புதல்வர். மன்னர்களுக்கெல்லாம் தலைசிறந்த முதல் மாமன் னர்! உங்கள் அண்ணனும்கூட! ஆதலால் நீங்கள் அவரிடம் சென்று அவரை வணங்குவது நல்லது. ஏ! மன்னரே! நாட்டு மக்கள் அனைவரும், அமரர்களும், வித்யாதரர்களும், முப்பத்து மூன்று ஆயிர முடி சூடிய மன்னர்களும் அவரை வணங்குகின்றனர். ஆதலால் நீங்களும்கூட அவரை வணங்குவது நல்லது'' எனக் கூறினான். இதைக்கேட்ட பாகுபலி புன்னகை புரிந்து கூறலானார்.

"ஏ தூதுவனே! குடும்ப மக்களிடையே ஒருவருக் கொருவர் ஒற்றுமை நிலவும்போது அன்பும் அடக்கமும் அவசியம் உண்டு. ஆனால் ஒருவருக்கொருவர் விரோதம் ஏற்பட்டபோது அன்பும் அடக்கமும் மறைந்து விடுகிறது.

---

1 பகவான் ரிஷபதேவர் வாலறிவு பெற்றவுடனே அவருடைய குமார ராகிய விரஷபசேனர் துறவு மேற்கொண்டு பகவானின் அறவுரை ஆற்றும் அவையில் முதல் கணதரராகத் திகழ்ந்தார்.

அண்ணன் வணக்கத்திற்குரியவர்தான் என்பது மற்ற நாட்களில் பொருந்தும். ஆனால் அவர் தலைமீது வாள் தூக்கிய பிறகு அவரை வணங்குவதற்கு இடமே இல்லை. அவரை வணங்குவதும் முறை அல்ல. என் தந்தையார் எனக்குக் கொடுத்த என்னுடைய நிலத்தில் அவன் ஆட்சி புரிய விரும்புகிறான். 'நானும் என்னுடைய அதிகாரத்தையும் ஆட்சியையும் கௌரவத்தையும் காப்பாற்றவேண்டுமல்லவா? 'பாகுபலி உங்களிடம் வரவும் விரும்பவில்லை. உங்களிட மிருந்து எதையும் பெறவும் விரும்பவில்லை. உங்களுக்கு யாதும் கொடுக்கவும் விரும்பவில்லை' என நீபோய் உன்னுடைய மன்னராகிய பரதனுக்குக் கூறிவிடு'' என்றார்.

தூதுவனுடன் இப்படி பேசிக்கொண்டிருக்கும்போதே பாகுபலி பரதனுடன் போர் புரிவதற்குத் தயாராகிவிட்டார். இருவருடைய படைகள் போர்க் களத்தில் போர் செய்ய ஆயத்தமாய்விட்டன.

தூதுவன் வாயிலாக செய்தியை அறிந்த மாத்திரத்திலேயே பரத சக்கரவர்த்தியும்கூட பௌதனபுர அரசுமீது போரிட ஆணை பிறப்பித்துவிட்டார். இரு சகோதரர்களும் போர்க்களத்தில் ஒருவருக்கொருவரை எதிர்த்துப் போர் துவங்க இருந்தபொழுது இருவருடைய அமைச்சர்கள் ஒன்று சேர்ந்து ஆலோசனை செய்கின்றனர்.

ஒரு அமைச்சன் கூறுகிறார்: 'இவ்விரு சகோதரர்களும் இப் பிறவியிலேயே முத்தி பெறும் வாய்ப்புப் பெற்றவர்கள். (சரம சரீரி) இவ்விருவருடைய போரினால் படைகளுக்குத் தான் அழிவு. ஒருவர் சக்கரவர்த்தி. மற்றொருவர் காமதேவர், இருவரும் மிகுந்த பலசாலிகள். இருவரும் பகவான் விரஷப தேவருடைய புதல்வர்கள். இவ்விருவரில் ஒருவரை ஒருவர் வெல்லவும் முடியாது.. ஆதலால் இந்தப் போர் பயனற்றது.

இதைக் கேட்ட மற்றொரு அமைச்சர் கூறுகிறார்: இவ்விருவருடைய போர் அறப் போராக அமைய வேண்டும்.

இவ்விருவரும் தங்களுக்குள் போர் செய்து தங்களுடைய வெற்றியையும், தோல்வியையும் தாங்களே முடிவுசெய்து கொள்வது நல்லது. இதில் படைகள் அழிவது ஏன் ?

மூன்ருவது அமைச்சர் கூறுகிருர் : 'ஆமாம்! இதுவும் சரியே! காட்சிப் போர் (த்ருஷ்டி யுத்தம்), நீரில் போர் (ஜல யுத்தம்), மல்யுத்தம் (புஜ யுத்தம்) என மூன்று போர்களை நியமித்து இவற்றில் யார் வெல்லுகிருர்களோ அவரே இந் நிலத்தை ஆளலாம் என ஒரு முடிவை மேற்கொண்டு இதை அவ்விருவரிடமும் கூறி இதன்படியே செய்யவும் முறையிட வேண்டும். இதைக் கேட்ட எல்லா அமைச்சர்களும் இதுவே நல்லது இதுவே சரியானது என்றனர்.

இவருடைய அமைச்சர்களும் ஒன்று சேர்த்து வல்லமை பொருந்திய இரு மன்னர்களிடமும் தம்முடைய முடிவினைக் கூறி மண்டியிட்டு வேண்டுகின்றனர். இரு மன்னர்களும் அமைச்சர்களுடைய வேண்டுகோளை ஏற்று மகித்து, 'நீங்கள் கூறியதே சரி! உங்கள் முடிவே சாலச்சிறந்தது! இதுவே அறப்போர் ஆகும்' என்றனர்.

**சகோதரர்களுக்கிடையே போர் :**

போர்க் களத்தில் தங்கள் தங்களைச் சார்ந்த சிற்றரசர்கள் நேருக்கு நேராக அமர்ந்துள்ளனர். இவர்களுக்கு எதிரில் பரத சக்கரவர்த்தியும் பாகுபலியும் போர் செய்ய வருகின்றனர். முதன் முதலில் 'த்ருஷ்டி யுத்தம்' (கண் இமை கொட்டாது ஒருவருக்கொருவர் பார்த்துக்கொண்டே இருப்பது) துவங்கியது. பரத சக்கரவர்த்தி 500 வில் உயரம். பாகுபலி 525 வில் உயரம். ஆதலால் பரத சக்கரவர்த்தியின் கண்பார்வை மேல்நேக்கி இருப்பதால் அவருடைய கண்

---

நான்கு முழம் ஒரு வில் உயரமாகும். இந்த கணக்குப்படி பரத சக்கரவர்த்தி 2,000 முழ உயரமும் பாகுபலி 2,100 முழ உயரமும் ஆவர்.

இமை விரைவில் அசைந்துவிட்டது. இதில் அவர் தோல்வி யுற்றார். இரண்டாவது ஜல யுத்தம் (நீரில் போர்). இந்தப் போரை ஆரம்பிக்க இரு சகோதரர்களும் நீர் நிலையை அடைந்து ஒருவருக்கொருவர் நீரை இறைத்து போர் செய்கின்றனர். இதிலும்கூட பரத சக்கரவர்த்தியின் முகத்தில் நீர் துளிகள் படுவதால் மனம் கலங்கினார். இதிலும் அவருக்குத் தோல்வியே. மூன்றாவது மல்யுத்தம் (குஸ்தி) இந்தப் போரில் இரு சகோதரர்களும் வெகு நேரம்வரை ஈடு பாடுக் கொண்டிருந்தனர். ஆனால் இதில் யாரும் வெற்றியோ, தோல்வியோ பெறவில்லை. பாகுபலி பரத சக்கரவர்த்தியைத் தூக்கி ஆகாயத்தில் சுற்றலானார். அப்பொழுது அவர் உள்ளத்தில் ஒரு நல்லெண்ணம் தோன்றியது. 'ஓ! இவர் என் அண்ணன்! இவரை நிலத்தில் வீழ்த்துவது நல்லதல்ல' எனக் கருதி அவர் தன்னுடைய அண்ணனைத் தனது தோள்மீது அமர வைத்துக்கொள்கிறார். அப்பொழுது 'பாகுபலி வாழ்க! பாகுபலி வாழ்க!' என வெற்றி நாதம் எழுந்தது! பரத சக்கரவர்த்தியைச் சார்ந்த மக்கள் முகத்தில் வருத்தம் வெளிப்பட்டது பாகுபலி தனது தோளிலிருந்து அண்ணனைக் கீழே இறக்கி ஒரு உயர்ந்த ஆசனத்தின்மீது நிறுத்தினார். அப்பொழுது பரத மாமன்னன் தோல்வியினால் மானபங்கமடைந்து ஆவேசத்துடன் தனக்குள்ள சக்கரவர்த்தி பதவி ஆசையால் தனது சக்கர ரத்தினத்தை ஏந்தி அதை சுற்றி தனது தம்பியின்மீது ஏவுகிறார். சக்கரரத்னம் பாகுபலியின் அருகில் சென்று அவரை மூன்றுமுறை வலம்வந்து தனது பலத்தையும் இழந்து அவர் அருகில் போய் நின்றுவிட்டது. அப்பொழுது பெரிய பெரிய அரசர்களெல்லாம் பரத மாமன்னனை நிந்தனை செய்து 'போதும்! போதும்! மாமன்னரே! உங்கள் வீரத்தை நிறுத்துங்கள்!' என்றனர். இதைக் கேட்ட பரத மாமன்னர் மனவருத்தம் கொண்டு துன்பத்தில் ஆழ்ந்தார். அப்பொழுது பெரிய பெரிய அரசர்கள் எல்லாம் பாகுபலியைப் போற்றிப் பாராட்டினர். அப்பொழுது பாகுபலி தன் சிறப்பினை உணர்ந்து பரத மாமன்னனிடம்

'அஹோ! நீங்கள் உங்களுடைய வலிமையைக் காட்டினீர்' என்று கூறிக்கொண்டே உள்ளத்தில் சிந்திக்கலானார்.

**விரக்தியின் எல்லை :**

'ஆ! என்னுடைய அண்ணன் அழியக்கூடிய அரசுக்காகவும், இராஜ்யத்திற்காகவும், தகாத செயலைச் செய்தார் அல்லவா? மண்ணாசைக்குட்பட்டு மதிமயங்கிய அவர் தனது கோத்திரத்தைச் சார்ந்தவர்களை சக்கர ரத்தினம் தாக்குவதில்லை என்பதை உணரவில்லை அல்லவா? மேலும் அவர் மூன்று போரிலும் தோல்வியுற்றும்கூட நீதி முறையினை மீறியது ஏன்?' என நினைத்து, அத்தகு அரச கௌரவத்தை இகழ்ச்சி செய்து இந்த மண்ணாசையானது சகோதரர்களுக்கிடையேயுள்ள அன்பினை அறுத்துவிடுகிறது அல்லவா? என நிந்தித்து, பரத சக்ரவர்த்திபிடம் கூறுகிறார் : 'மன்னர்களில் தலை சிறந்த மாமன்னனே! நீ மண்ணாசைக்குட்பட்டுத் தகாத செயலைப் புரிந்து உன் வீரத்தைக் காட்டினாய்! ரிஷபதேவருடைய புதல்வராகிய பரத மன்னன் தனது குல கௌரவத்தைக் காப்பாற்றினார். என்றும் அழியா புகழை இந்த உலகத்தில் நிலைநாட்டினாய். எந்த இராஜ்யலட்சுமி நிரந்தரமானது எனக் கருதுகிறீரோ அது என்றென்றும் உன்னுடனே இருக்குமா? ஏ! மூத்தவரே! இந்த சாம்ராஜ்யம் உனதாகவே இருக்கட்டும் இப்பொழுது இது எனக்குத் தேவை இல்லை என்றும் நிலைத்து உள்ள முத்தி லட்சுமியினைப் பெறுவதற்காகத் துறவு மேற்கொள்ள வனத்தை நோக்கிச் செல்ல விரும்புகிறேன். அறியாமையால் நான் ஏதாவது தவறு செய்து இருந்தால் என்னை மன்னித்துவிடுங்கள் அண்ணா! பாகுபலியின் இந்த கருணை மிக்க வார்த்தைகள் பரத மாமன்னரின் உள்ளத்தில் அமைதியை ஏற்படுத்துகிறது. அவர் தான் செய்ததை உணர்ந்து இரக்கம் கொண்டு, 'ஆ! நான் பெரிய தவறு செய்தேன்' என்றார். இதைக் கேட்ட பாகுபலி 'நான் துறவு கொள்ள விரும்புகிறேன்' என்றார். இதைக் கேட்ட பரத

மாமன்னன் உள்ளத்தில் சகோதர பாசம் ஏற்பட்டதினால் "ஏ! பாகுபலி இப்பொழுது துறவு மேற்கொள்ளும் நேரம் வரவில்லை. இன்னும் சில நாட்கள்வரை அரண்மனை வாசம்செய்க. ஆட்சிபீடத்தில் அமர்ந்து பௌதனபுர ஆட்சியை சீரும் சிறப்புமாக நடத்திவருக என்றார்!" ஆனால் பாகுபலி தான் மேற்கொண்ட முடிவிலிருந்து நழுவவில்லை. பரத சக்கரவர்த்தியிடம் ஏதேதோகூறி அவரை மகிழவைத்துத் தன்னுடைய புதல்வனாகிய மகாபலி குமாரனுக்கு முடிசூட்டி அரண்மனையிலிருந்து புறப்பட்டு பகவான் விரஷபதேவர் சமவசரணம் சென்று அவருடைய திருவடிகளிலே வீழ்ந்து வணங்கித் திகம்பர தீட்சையை மேற்கொண்டார்.

**அந்தரங்க பகையை வெல்லுதல்:**

காமதேவனாகிய பாகுபலி தீட்சை கைகொண்ட பிறகு ஓராண்டு காலம் உபவாசம் இருப்பதாக விரதம் ஏற்று ஒரே இடத்தில் ஒரே நிலையாகத் தவக் கோலத்தில் நின்றுவிடுகிறார். இவருடைய திருமேனி மரகதமணிபோன்று பச்சை நிற மாகவும், மூவுலகத்திலுள்ள எல்லா அழகும் இவரிடமே வந்து அமைந்து விட்டதுபோலவும் காட்சி அளித்தது. இருபத்து நான்கு காமதேவர்களில் இவரே முதற் காமதேவராக இருந்தார். எண்ணற்ற வீரியத்துடன் கூடியதும் சம சதுர உருவமுடையதும் ஆகிய 'வஜ்ஜிர விரஷப நாராச சம்ஹனன' அமைப்பைப் பெற்ற அவருடைய திருமேனி வஜ்ஜிரத்தைப்போன்று கெட்டியாகவும், இளம் வயதில் செய்த தேகப் பயிற்சியின் விளைவால் உடற் கட்டாகவும் அமைந்திருந்தது. அவர் தவக் கோலத்தில் தன்னுடைய இரு புஜங்களையும் தொங்கவிட்டுக்கொண்டு கண் பார்வையை தனது மூக்கின் நுனி பாகத்தில் செலுத்தி ஞானக் கண் வாயிலாக அந்தரங்க தியானத்தில் ஆழ்ந்து தன்னுடைய சுத்த ஆன்மாவைக் காண முற்படுகிறார். இருபத்தெட்டு மூலகுணமும் பதினெட்டு 'பரிஷஹ ஜெயமும்' முதலிய எல்லா உத்தர குணமும் அவருடைய ஒரு நிலை தியானத்

தில் அடங்கியதாக அமைந்தன. அவருடைய தியானம் மாயை, மித்யா, நிதானம் என்னும் உறுத்தலிருந்து (சல்ய பராம் நிச்சல்யதாம் கத: ஆதிபுராணம் பர்வம் 39 பக்கம் 212.) விடுபட்டு தசதர்மம் என்னும் பத்து அறங்களிலேயே ஆழ்ந்து இருந்தது, மன அடக்கம், வசன அடக்கம், காய அடக்கம் என்னும் மூன்று குப்திக்கு உட்பட்டு குரோதம், மானம், மாயை, லோபம் என்னும் கஷாயங்களை உதிர்த்து நிச்சய ரத்தின திரயத்தில் தோய்ந்துள்ளார்.

## அற்புத யோக சாதனை:

தவக் கோலத்தில் நின்று பல மாதங்கள் கடந்துவிட்டன. அவருடைய கால்கள் அடியில் பாம்புகள் புற்றுகளைக் கட்டின. பாம்புக் குட்டிகள் அப் புற்றின் வாயிலில் தம் தலையை நீட்டுவதும் சிற்சில நேரங்களில் அவை தவ மாமுனிவர்மீது ஏறி விளையாடுவதும் நிகழ்ந்தன. பெரிய பெரிய பாம்புகள் படமெடுத்து ஆடிக்கொண்டும், சுற்றிக்கொண்டும் இருந்தன. அவருடைய திருமேனியின்மீது ‘வாசந்தி’ என்னும் ஒருவகைக் கொடி படர ஆரம்பித்தது. பறவைகள் கூடுகளைக் கட்டிக்கொண்டன. தேள், அரணை, பல்லி போன்ற உயிரினங்கள் அவருடைய உடல் மீது ஏறுவதும், இறங்குவதுமாக இருந்தன. மாமுனிவர்கள் தொடர்பு எல்லா உயிரினங்களுக்கும் உரியதாகவே அமைவது இயல்பல்லவா? கோடைக் காலத்தில் கடும் வெய்யிலையும் பொறுத்துக்கொண்ட பாகுபலி எள்ளவும் ஆன்ம தியானத்திலிருந்து நீங்கவில்லை. மழைக் காலத்தில் கனத்த மழையையும், பயங்கர இடி மின்னலையும் பொருட்படுத்தவில்லை. குன்றுகள் மீதுள்ள சிறு சிறு பாறைகள் உருண்டு விழுந்தபோதிலும் பாகுபலி முனிபுங்கவர் தவத்திலிருந்து அசையவில்லை. குளிர் காலத்தில் குளிர்ந்த காற்று வீசியது. மக்கள் குளிரால் அவதியுறுகின்றனர். அவர்களுடைய சரீரம் நடுநடுங்குகிறது. ஆனால் தவத்திரு பாகுபலி முனிபுங்கவரோ மேருமலைபோன்று அசையாமலும்

ஆடாமலும் நின்று தவத்திலேயே ஆழ்ந்திருந்தார். பனிக் கட்டிகள் அவருடைய சரீரத்தின்மீது விழுந்தன. பனித் துளி மழைபோன்று பெய்தன. ஆனால் இவரோ அத்தகு இன்ன லுக்கும் கலங்காமல் வினைகளை வீழ்த்துவதிலேயே ஈடுபாடு கொண்டிருந்தார் என்பது வியப்பாகவுள்ளது அல்லவா?

## இருத்தியும் சித்தியும்:

பாகுபலியின் உள்ளத்தில் நவீன பேத விஞ்ஞானம் (ஆன்மா வேறு உடல் வேறு என்கிற பகுத்தறிவு) வெளிப் பட்டதினால் ஜீவாதி பொருட்களைத் தியானத்தில் கொண்டு அவற்றின் இயல்பினையும் தொடர்பினையும் சிந்தித்து ஆன்ம நிலையில் தோய்துள்ளார். மதி ஸ்ருதம் என்னும் ஞானத்தின் சிறப்புத்தன்மை வெளிப்பட்டதினால் பீஜபதம் அட்சரபதம் என்னும் சொற்கள் அடங்கிய நூல் அறிவினை முழுதளவும் பெற்றுவிடுகிறார். களஞ்சியத்தில் நிரம்பியுள்ள தானியத்தைப் போன்று தனது அறிவுக் களஞ்சியத்தில் அநேக பொருட்களின் இயல்பினை அறியும் ஞானத்தை வெவ்வேராக வைத்து 'பீஜபுத்தீனம்' கோஷ்டபுத்தீனம் என்னும் இருத்தினைப் பெற்றுவிடுகிறார். தியானத்தின் வலிமையால் பன்னிரண்டு அங்கங்களாக அமைந்துள்ள நூல் அறிவுபெற்று ஸ்ருதகேவலி என்னும் பதவியினைப் பெற்றுவிடுகிறார். சர்வாவதி என்னும் பதவியினைப் பெற்று விடுகிறார். சர்வாவதி என்னும் சிறந்த அவதி ஞானத்தையும் விபுலமதி என்னும் மிகத் தூய மனப்பர்யய ஞானத்தையும் அடைந்துவிடுகிறார். மேன்மேலும் செயல்பட்டு வந்த கடும் தவத்தின் வலிமையாலும்; ஒரு நிலை தியானத்தின் விளை வாலும், உடல் பலம் மேன்மேலும் அதிகரித்து, ஒளி மயமான மேனியினை அடையக்கூடிய தீப்த தவம் என்னும் கடுந் தவ இருத்திகள் வெளிப்படுகின்றன. இந்த இருத்தியின் வலிமை யால் மிக நுணுக்கமான (அதிசூக்ஷம) உடற்கூறையும் பெறக் கூடும். மேலும் மாபெரும் உடலமைப்பையும் வெவ்வேறு சரீரத்தையும் அடையக்கூடிய விக்கிரியா இருத்தியும் ஏற்படு

கிறது. ஆமௌஷதி என்னும் இருத்தியும் பெறப்படுகின்ருர். இந்த இருத்தியின் வலிமையால் உடலில் ஏற்படும் எல்லா விதமான நோய்களும் விலகிவிடும். மேலும் இந்த இருத்தியைப் பெற்றவர் உடலில் பட்ட காற்று மற்றவர் உடலில் பட்ட மாத்திரத்திலேயே அவர்கள் உடலில் உள்ள நோயும் நஞ்சும் விலகிவிடும். கையில் வந்த சத்தற்ற ஆகாரமும் பால், நெய் ஆகிய திரவப் பொருட்களும் அமிருதத்திற்கு ஒப்பான இனிமையைப் பெறக்கூடியதும். கூறிய வார்த்தையும்கூட அமிருதம் போன்று ஆகக்கூடியதும் ஆகிய தன்மையினை விளைவிக்க வல்ல 'சீரஸ்த்ராவி' அமிருத ஸ்த்ராவி' முதலிய இருத்தியும் வெளிப்பட்டுவிட்டன. நாற்பத்தெட்டு நிமிட நேரத்திற்குள் பன்னிரண்டு அங்கங்களாக அமைந்த ஆகமங்களை நினைக்கும் ஆற்றலும், படிக்கும் ஆற்றலும் மூவுலகத்தில் நிகழும் செயல்களைப் பரோட்ச ரூபமாக அறியும் ஆற்றலைக் கொடுக்கக்கூடிய மனோபலம், வசனபலம், காயபலம் என்னும் இருத்திகளும் ஏற்பட்டுவிட்டன. மிகச் சிறிய இடத்தில் எண்ணிலடங்காத தேவர்களும், தேவியரும் எண்ணிக்கைக்குட்பட்ட மனிதர்களும், விலங்குகளும் ஒருவருக்கொருவர் இயல்பாக ஏற்படும் விரோத மனப்பான்மையை விட்டு மற்ற உயிரினங்களுக்கு அமைதியை அளிக்கும் ஆற்றலையும் கொடுக்க வல்லதுமான அட்சீன மகாலயமென்னும் இருத்தியும் கிடைத்துவிடுகிறது. இத்தகு இருத்திகளைப் பெற்றதினால் அவரை வழிபட வந்த மக்கள் அவருக்குக் கிடைத்த இருத்திகளால் எவ்வித இன்னலும் வியாதியும் துன்பமும் கவலையும் கஷ்டமும் தொல்லையும் இன்றி எல்லாவித இன்னல்களையும் போக்கி அமைதியடைந்து இன்புமுறுகின்றனர்.

**தவ வனத்தின் அழகு:**

பாகுபலி மாமுனிவர் தவம் செய்யும் வனம் அற்புத அழகையும் அமைதியையும் அறச்சூழ் நிலையையும் பெற்று விடுகிறது. ஆறு பருவ காலங்களிலும் உண்டாகும் மலர்

களும் கனிகளும் அவ் வனத்தில் ஒருங்கே பூத்து காய்த்து பழுத்து அழகையும் அற்புத மனத்தையும் அளிக்கின்றன. மா, பலா, வாழை, மாதுளை, தென்னை ஆகிய மரங்கள் காய் கனிகளை ஏற்று என்றென்றும் நிலைத்து அவ் வனத்தில் வரும் அன்பர்களை 'வருக வருக' என அழைப்பதுபோல் காட்சி அளிக்கின்றன. மல்லிகை, முல்லை, சாமந்தி, மருதம் ஆகிய மலர்கள் நன்கு மலர்ந்து புன்னகை புரிவது போல் காணப்படுகின்றன. சிங்கம், புலி, யானை, சிறுத்தை, மலைப் பாம்பு, கருநாகம், மயில், பசு, எருமை, மான், முயல், ஆகிய காட்டு மிருகங்களும் வீட்டு மிருகங்களும் ஒன்றுக்கொன்று ஜன்ம விரோதத்தைப் பாராட்டாது தங்களுக்குள் அரிய நட்புக்கொண்டு மகிழ்ச்சியுடன் அளவாளாவின. சிங்கம் பசுவின் கன்றுக்கும் பசு சிங்கக் குட்டிக்கும் பால் கொடுக்கும் அற்புதக் காட்சி அங்கு நிலவியது. அமைதியும் அறச் சூழ்நிலையும் அங்குப் பரவி இருக்கிறது.

யானைக் கூட்டம் தாமரை இலை தொன்னையில் நீர் நிறப்பிக் கொண்டு வருவதும் பாகுபலியின் பாதங்கள் உள்ள பீடத்தை கழுவுவதும் நிகழ்கின்றன. யானைகள் தாமரை மலரைக் கொண்டுவந்து அப் பீடத்தில் வைத்து பாகுபலி மாமுனிவரை வழிபடுகின்றன. ஆ! தபோவனம் எவ்வளவு அமைதியை அளிக்கிறது! வனத்தில் மலரும், கனிகளும், தாங்கிய பாரத்தினால் வளைந்து இருக்கும் கிளைகளயுடைய மரங்கள் பகவான் பாகுபலியை வணங்குவதுபோல காணப்படுகின்றன. அங்குமிங்கும் படர்ந்து இருக்கும்

---

ஹரிண்யோ விசினீபத்ரபுடை: பானீயமானயத்
தத்யோகபீட பர்யந்த புவ: சமமார்ஜனேச்சயா (69)
புஷ்கரை: புஷ்கரோதஸ்தைர்ந்ய ஸ்தைராத விபத த்வயம்
ஸத்பேரமா முனிம் பேஜ்உ ரஹோ சமகரம் தப: (20)

ஆதிபுராணம், பர்வம் 39, பக்கம் 215

கொடிகளிலிருந்து விழும் மலர்கள் பகவான்மீது மலர்மாரி பொழிவதுபோலவும் காற்றின் அசைவினால் தனது சிறிய கிளைக் கொம்புகளை அசைத்துக்கொண்டிருப்பது தனது கைகளை ஆட்டி அசைத்து நடனமாடுவதுபோன்றும் தோன்றுகின்றன. கருநாகங்களின் படங்களில் உள்ள மாணிக்க மணியின் ஒளி காகினீ ரத்தினத்தின் ஒளி பரவுவது போல் காணப்படுகிறது. மயில்கள் கருமேகத்தைக் கண்டு நடனமாடுவதுபோன்று தமது கண்ணாடி இறகுகளைப் பரப்பி நடனமாடிக்கொண்டு இனிமையான இசைக் குரல் எழுப்பி அமரப் பெண்டிர்களின் மனதைக் கவருகின்றன.

**தவத்தின் வலிமை :**

பகவான் பாகுபலியின் தவப்பெருமை அளவு கடந்தது அவர் செய்த தவ வலிமையினால் அவரைக் கண்ட விலங்குகளின் மனதில் உள்ள அஞ்ஞான இருட்டும் கொடுமை எண்ணமும் மறைந்துவிட்டன. அங்கு எப்பொழுதும் மிதமான மனமுள்ள மாருதம் வீசுகின்றது. பக்தர்கள் திரள் திரளாக அங்கு வந்து பக்தி செலுத்தி வழிபாடு செய்து இசையுடன் பக்திப் பாடலைப் பாடுகின்றனர்.

**தூய தியானத்தைத் தியானிக்கும் தவத்தோன் :**

பகவான் பாகுபலி தவக் கோலத்தில் நின்றவண்ணம் இருக்கும்போது ஆகாய மார்க்கமாக சென்றுகொண்டிருந்த வித்யாதரர்கள் விமானம் பகவான்மீது கடந்து செல்லாது தடைப்பட்டுவிடுகிறது. கீழே பகவான் தவத்தில் இருந்ததை அறிந்த வித்யாதரர்கள் விமானத்திலிருந்து கீழே இறங்கி பக்திக்கு கட்டுண்டு பகவானை வழிபடுகின்றனர். சிற்சில நேரங்களில் பகவானின் தவ வலிமையினால் தேவலோகத்திலுள்ள தேவர்களின் ஆசனமும் அசைவது உண்டு. அப்பொழுது தேவர்கள் அங்கிருந்து பாகுபலி அருகில்

வந்து அவரை வணங்கி அவருடைய திருவடிகளில் அமர லோகத்திலிருந்து கொண்டுவந்த திவ்ய மலர்களை வைத்து அர்ச்சிக்கின்றனர். சில தேவர்கள் தேவலோகத்திலிருந்து கொண்டே பகவானை வணங்கினர்.

கடும் தவம்புரியும் பாகுபலியை தரிசிப்பதற்கு வித்யாதர மங்கையர் இடைவிடாது வந்துக்கொண்டே இருந்தனர். அவர்கள் பாகுபலிமீது படர்ந்துகிடக்கும் கொடிகளை அகற்றி வந்தனர். ஆனால் கொடிகள் மேன்மேலும் வளர்ந்து அவருடைய திருமேனியின் வண்ணத்தை தமது வண்ண மாகவே கருதி தன் இனத்தைச் சார்ந்த சிறந்த பொருள் இது என நினைத்து அளவாளவுகிறதோ என ஐயத்தை ஏற்படுத்தி வந்தன.

## தூய தியானத்தைத் தியானிக்கும் தவத்தோன் :

பகவான் பாகுபலி 'ஆக்ஞாவிசய' 'அபாய விசய' என்னும் தர்ம தியானத்தை சிறந்த முறையில் நன்கு தியானித்து வருகிறார். அவர் ஆறுவது குணஸ்தானத் திலிருந்து ஏழாவது குணஸ்தானத்தில் சென்றுக்கொண் டிருக்கிறார். அவர் ப்பாவலிங்கி மாகா சாது. அவர் சிறந்த மேன்மையுள்ள தியானத்தைத் தியானிக்கும் தியாகி, ஒரு வருட யோகசாதனையை மேற்கொண்டதால் அவர் யோகி களுக்கெல்லாம் சிறந்த யோகியாக திகழ்ந்தார். ஆதலால் தான் அவர் 'யோக சக்ரேஸ்வர' என்று பெயர் பெற்றார். முக்தி பெறுவதற்குத் தகுந்த யோகசாதனையை அறிந்து செயல்பட்டதினால் அவர் மகாயோகி என அழைக்கப் பட்டார். அவருடைய யோக சாதனையின் பெருமையை யாராலும் விளக்கமுடியாது.

## வினைகள்மீது வெற்றி :

பகவான் பாகுபலி தூய தியானத்தின் வலிமையால் தூய பரிணாமத்தைப் பெற்று 'சுக்ல' தியானத்தில் தோய்ந்

துள்ளார். அவர் முதன் முதலில் ஏற்ற ஒரு ஆண்டு உபவாச காலம் முடிவுபெற்றதுமே பரத மாமன்னன் அவரிடம் வந்து பக்திக்கு கட்டுண்டு அநேக தோத்திரங் களைச் செய்து அவருடைய திருவடிகளை வணங்கி வழிபட லானான் அப்பொழுது பாகுபலி முனிபுங்கவர் 'சுக்ல' தியா னத்தில் தோய்ந்திருந்ததின் பலனால் காதி வினைகளை வென்று கேவலஞான ஒளியினைப் பெற்றுவிடுகிறார். அப் பொழுது தேவ லோகத்தில் தேவர்கள் ஆசனம் அசைய அவர்கள் திவ்ய அவதி ஞானத்தால் பாகுபலிக்குக் கேவல ஞானம் ஏற்பட்டதை அறிந்து குடும்பத்துடன் அங்கு வருகின் றனர். தேவேந்திரன் கட்டளைப்பெற்று தேவ சிற்பிகள் அரை நிமிட நேரத்திற்குள் 'கந்த குடி'யை அமைக்கின்றனர். பகவான் பாகுபலி பூமிக்குமேல் 5,000 வில் உயரத்தில் சென்று கந்தகுடியில் அமைத்த கமலாசனத்தில் நான்கு விரகடை இடைவெளிவிட்டு அமர்ந்துவிடுகிறார்.

## பாகுபலிக்கு சல்யம் (மன உறுத்தல்) இருந்ததா என்ன ?

பாகுபலி தியானத்தில் மூழ்கி இருக்கும்போது இடை இடையே சிற்சில நேரங்களில் நட்பு மனப்பான்மையினால் எனது அண்ணனாகிய பரதனுக்கு என்னால் வருத்தம் ஏற்பட்டது; என எண்ணம் ஏற்படலாயிற்று. ஆதலால்தான் பரதன்வந்து பாகுபலியை வணங்கியதுமே அவருக்கு கேவல ஞானம் ஏற்பட்டது, ஆனால் பரதனுடைய பூமியில் தான் நான் நிற்கிறேன் என்கிற (சல்யம்) மன உறுத்தல் அவருக்கு இல்லை. அவருக்கு (சல்யம்) மன உறுந்தல் இருந்திருந்தால் அவர் 'திரவ்ய லிங்கி' முனியாக இருந் திருப்பார் அந்நிலையில் அவருக்கு மனபர்யய ஞானமும் அநேக ருத்திகளும் கிடைக்க வாய்ப்பில்லாமல் போய் இருக்கும். இவை அவருக்குத் தியான நிலையில் ஏற்பட்ட தினால் அவர் உள்ளத்தில் உறுத்தல் (சல்யம்) இல்லை சல்யம் இல்லாததினால் அவர் 'ப்பாவலிங்கி' முனியாகவே திகழ்ந்தார் என்பது நன்கு விளங்குகிறது.

## சக்ரவர்த்தி நடத்திய வழிபாடு:

தனது சகோதரராகிய பாகுபலிக்குக் கேவல ஞானம் ஏற்பட்ட பிறகு பரத சக்கரவர்த்தி அடைந்த மகிழ்ச்சியைப் பற்றி விளக்குவது இயலாது. அவர் அளவு கடந்த மகிழ்க்சி யடைந்து தன்னுடைய குடும்பத்தாருடனும், துணைவர் களுடனும் சேர்ந்து பகவான் பாகுபலியிடம் வந்து மாபெரும் பூஜையை துவங்குகிறார். கங்கை நீரையும் கல்பக மரங்களி லிருந்துகொண்டு வந்த மலர்களையும் இரத்தினங்களைக் கொண்டு அமைத்த அர்க்யயத்தையும் நவநிதிகளையும் வழிபாட்டில் அர்ச்சனைச் செய்து அற்புதமான மகா பூஜையை நடத்தினர் ஒன்று பாகுபலி பரத சக்கரவர்த்தியின் சகோ தரர், இரண்டாவது பரத சக்கரவர்த்திக்கு அறத்தில் அதிக பற்று உண்டு, மூன்றுவது இவ்விருவரும் பல பிறவியில் தொடர்புடையவாராக இருந்துவந்தனர், நான்காவது இவ் விருவரும் ஒருவருக்கொருவர் ஆழ்ந்த நட்புள்ளவராக இருந்துவந்தனர். இந் நான்கு தொடர்புகளில் ஒவ் வொன்றும் பக்தியை வளர்க்கக்கூடியதாகும். ஆனால் இந்த நான்கும் ஒருங்கே அமைந்துவிட்டது என்றுல் பக்தியின் சிறப்பினைப் பற்றி கூறவா வேண்டும்?

பரதன் செய்த முதல் பூஜை தான் செய்த தவறைப் போக்குவதற்காகவும், இரண்டாவது செய்த பூஜை கேவல ஞானம் ஏற்பட்டதினால் அடைந்த மகிழ்ச்சியை வெளிப் படுத்துவதற்காகவும் ஆகும்.

---

**வத்சரா நசனஸ்யாந்தே பரதேசேன பூஜித:**
**ச பேஜே பரம ஜ்யோதி: கேவலாக்யம் யதட்சரம் (85)**
**சங்கிலிஷ்டோ பரதாதீச: சோஸ்மாத் இதியத்கில**
**ஷ்ரத்த்யஸ்ய ஹார்த தேநாசீத் தத்பூஜாபேட்சி கேவலம் (85)**

**ஆதிபுராணம், பர்வம் 36**

**பக்கம் 217**

**தேவர்கள் செய்த வழிபாடு :**

சௌதர்ம இந்திரனும்கூட இந்திராணியுடனும் எண்ணிலடங்கா தேவர்களுடனும் சேர்ந்து பகவான் பாகுபலியை வழிபடுகிறான். வழிபாடு முடிந்த பிறகு தேவர்களும், மனிதர்களும், வித்யாதரர்களும், விலங்குகளும் அவரவர்களுக்கென அமைத்த அவையில் அமர்ந்து பகவானின் அறவுரையைக் கேட்டனர். அவர் உதடு, தாடை, வாய் ஆகியனவற்றின் அசைவு இல்லாமலே அறவுரை ஆற்றினர்.

**அறவுரை அமிருதம் :**

"ஏ பவ்ய உயிர்களே! இவ்வுலகில் ஒவ்வொரு உயிரும் தனித்தனியே! அவை தனியாகவே பிறக்கின்றன! தனியாகவே இறக்கின்றன! இந்த ஆன்மா வரையிலா ஞானம், வரையிலா காட்சி, வரையிலா இன்பம், வரையிலா சக்தி உடையது. தூய்மையும் சித்தத் தன்மையும் பெற்றது, ஆனால் அனாதி காலத்திலிருந்து வினையானது இதை அடிமையாக்கிப் பிறவிச்சுழல் என்னும் சிறை வாசத்தில் இருக்கச் செய்கிறது அதனால்தான் இது எப்பொழுதும் அநேக இன்ப துன்பங்களை அனுபவித்துக்கொண்டிருக்கிறது. நீ பிறவிச் சுழலிருந்து விடுபட விரும்புவாயானால் ஜினபகவானால் கூறப்பட்ட தூய அறத்தைக் கடைபிடித்து பொய்யை (மித்யாத்வத்தை) விட்டு கொலை, பொய், களவு, குசீலம், பேராசை என்னும் பாபச்செயல்களிலிருந்து விலக வேண்டும். இதுவே முக்திக்கு வழி!

இதன்படி அறமாரி பொழிந்து பகவான் பாகுபலி அநேக ஆண்டுகள்வரை பூமியில் ஸ்ரீவிஹாரம் செய்துக்கொண்

டிருந்தார். பிறகு கைலாசகிரி (கைலாய மலை)யின் மீது சென்று பகவான் விரஷப தேவரின் சமவ சரணத்திலுள்ள கேவலிகளின் அவையில் அமர்ந்துவிடுகிறுர். (கேவலிகள் விஹாரமும் உபதேசமும் தன்னம் தானாகவே செயல்பட்டுக் கொண்டிருக்கும் அதற்கு யாருடைய விருப்பமும் வேண்டு கோளும் காரணமாக அமைவதில்லை.)

**முக்தி :**

கடைசியில் பகவான் பாகுபலி மீதி இருந்த அகாதி வினைகளை வென்று அழியாத அனந்த பரம ஆனந்த மயமான முக்தியுலகை எய்தினார். அங்கு பிறப்பு இல்லை. இறப்பு இல்லை, பசி இல்லை, தாகம் இல்லை, தூக்கம் இல்லை, சோம்பல் இல்லை, பிறவித் துன்பம் இல்லை, இல்லற இன்பம் இல்லை! ஆத்மாவில் ஏற்படும், புலன்களில்லாத, தங்கு தடை இல்லாத, அழிவு இல்லாத, இன்பமே உண்டு. வரையிலா இன்பமும் வரையிலா காட்சியும் வரையிலா வீரியமும் முதலான எண் குணங்களையுடைய ஆன்மா வாகவே ஆனார் அந்தப் பாகுபலி மறுபடியும் இவ்வுலகில் அவதரிக்கமாட்டார்.

நான்காம் காலத்தில் முதன் முதலில் முக்திபெற்ற பகவான் பாகுபலி நமக்கு சக்தியையும் முக்தியையும் அளித்துதன்னைப் போன்றே ஆக துணை செய்வாராக!

**ஸ்ரீ பாகுபலி படிமை :**

கி. பி. பத்தாம்நூற்றுண்டு கங்க வம்சத்து ராசமல்ல மன்னனின் முதலமைச்சராகிய சாமுண்டராயர் புகழ்பெற்ற மாமனிதனாக விளங்கினார். ராசமல்ல மன்னன் கி.பி. 974 முதல் 984 முடிய 10 ஆண்டுவரை கங்கவாடியில் அரசுபுரிந்து வந்தார். சாமுண்டராயர் அவருடைய முதலமைச்சராகவும் சேனைத் தலைவராகவும் இருந்தார். கங்க வம்சத்தை விரிவு படுத்த அவர் பல போர்கள் புரிந்து வெற்றிகண்டார்.

ஆதலால் அவருக்கு 'ரணரங்க சிம்மன் வீரமார்தண்டன்' என்ற பட்டப் பெயர்களும் வழங்கிவந்தது. அவர் க்ஷத்ரிய குலத்தில் பிறந்தார் அவருடைய தந்தையார் 'மகாவக்ரன்' தாயார் பெயர் கல்லாதேவி. அவருடைய துணைவியாரின் பெயர் ஆஜிதாதேவி அவருக்கு ஜினதேவன் என்கிற புதல்வன் ஒருவன் இருந்தான்!

ஒருநாள் அவருடைய தாயாராகிய கல்லாதேவிக்கு பரத சக்கரவர்த்தியினால் நிருவப்பட்ட 525 வில் உயரமான மரகத மணியின் படிமையைப்பற்றி முனிபுங்கவர் ஒருவர் விளக்கிக் கூறி அந்த படிமை தட்சசிலாவிற்கு அருகில் பௌதனபுரம் என்னும் நகரத்தில் உள்ளது என்கிற செய்தியையும் தெரிவித்தார். படிமையின் சிறப்பையும் பெருமையையும் அறிந்த தாயார் உள்ளத்தில் படிமையைத் தரிசிக்க வேண்டுமென்கிற பேராவல் ஏற்பட்டது. படிமையைத் தரிசிக்கும்வரை பால் அருந்தமாட்டேன் என்கிற சபதமும் ஏற்ருர். ஒருநாள் சாமுண்டராயருக்கு தனது தாயார் ஏற்ற சபதத்தின் செய்தி தெரியவந்தது. அவர் அப்பொழுதே தாயாரின் சபதத்தை முடித்து வைக்க மரகதமணியால் ஆன பாகுபலி படிமை இருக்கும் திசையை நோக்கி யாத்திரையாக புறப்படவும் ஆயத்தமானார். அந்த யாத்திரை சங்கத்தில் ஸ்ரீ நேமிசந்திராசார்யரும் இருந்தார். யாத்திரையில் சில நாட்கள் கழிந்தன. ஒருநாள் அவர்கள் கடவப்ர பர்வதத்தின் மீது சென்று அங்கேயே முகாம் செய்தனர். அன்றிரவு சாமுண்டராயர் ஒரு கனவு கண்டார். அக் கனவு அவருக்குக் கீழ்க்கண்டவாறு கூறுவதுபோல் காணப்பட்டது. ஏ மாமன்னா! பௌதனபுரத்தில் அமைந்துள்ள பாகுபலி படிமை பாம்பு புற்றுகளால் மூடப்பட்டுவிட்டது. ஆதலால் அப்படிமை தரிசனம் கிடைப்பது அறிது. நீ இங்கேயே அத்தகு படிமை ஒன்றை நிருவி உன் தாயாருக்கு தரிசனம் செய்வித்து அவருடைய சபதத்தை முடித்துவைப்பாயாக! நீ தங்கி இருக்கும் மலைக்கு எதிரில் உள்ள மலையை நோக்கி நீ உன் பாணத்தை ஏவினால் அது எங்குபோய் மோதும்

கிறதோ அங்கு உனக்கு பாகுபலி படிமை தரிசனம் கிடைக்கும்.

மறுநாள் அதிகாலை எழுந்து தனது குருதேவராகிய நேமிசந்திராசார்யரிடம் ஆசியும் அனுமதியும் பெற்று கனவில் கண்டவாறு செய்தார். அவருடைய பானம் (அம்பு) எங்குப் போய் மோதியதோ அங்கு கற்சிலையில் படிமை உருவக் கோடு தயாராயிற்று! சில நாட்கள் சென்றபிறகு அழகிய பெரிய படிமை உருவாக்கப்பட்டது. அதற்கு பிரதிஷ்டை செய்யவும் முன்னேற்பாடுகள் துவங்கின. ஆசார்யஸ்ரீ நேமி சந்திரர் காட்டிய வழியினைக் கடைப்பிடித்து விதிமுறைப்படி பிரான பிரதிஷ்டையும் நடந்தேறியது. அப் பிரதிஷ்டையின் போது சாமுண்டராயர் 1008 குடங்களால் பாலாபிஷேகம் செய்தார். ஆனால் அவர் செய்த பாலாபிஷேகத்தின் பால் படிமையின் மார்பகத்திற்கு கீழே ஒரு துளிகூட இறங்கவில்லை. ஆயிரக் கணக்கான மக்கள் இக் காட்சியினை கண்டபடியே இருந்தனர். சாமுண்டராயர், ஏ பிரபு! என்னால் யாது தவறு நேர்ந்தது எனக் கூறி கவலையுற்றார். அப்பொழுது மக்கள் கூட்டத்திற்கு இடையில் ஒரு வயது முதிர்ந்த கிழவி ஒருத்தி தன் கைகளில் பால் நிரம்பிய ஒரு சிறிய குவளை ஏந்தி மக்கள் கூட்டத்தைப் பிளந்துக்கொண்டு பக்தியுடன் மலைமீது ஏறி னாள். இதனைக் கண்ட மக்கள் சிரித்து இவளைப் பரிகாசம் செய்தனர். பெரிய பெரிய குடங்கள் நிரப்பிக் கொண்டுவந்து செய்யும் பாலாபிஷேகம் பகவானின் மார்பகத்தைவிட்டு கீழே ஒரு துளிகூட இறங்கவில்லை. நீ கொண்டுபோகும் இந்த சிறிய குவளை பால்? கிழவீ வேண்டுகையின்பேரில் மக்கள் அவளுக்கு வழிவிட்டனர். கிழவி தட்டுத் தடுமாறி சாரத்தின் மீது ஏறி குவ்ளை பாலை பகவான் தலைமீது அபிஷேகமாச் செய்தாள். அவள் செய்த அபிஷேகத்தின் பால் பெரும் தாரையாகப் பெருகி பகவானின் அவயவ முழுதும் பரவியது மல்லாமல் வெள்ளம்போல் பெருக்கெடுத்து மலைப் பகுதி எல்லாம் கடந்து நிலத்தில் போய் பாய்ந்து மலையடியில் பாற்கடல்போல் தேங்கிவிட்டது. ஆ என்னவியப்பு?

இந்த மூப்படைந்த மாது இத்திருத்தலத்தைக் காக்கும் சாசனதேவியாகிய கூஷ்மாண்டினி யட்சியே தவிர வேறு யாரும் அல்ல என்று சித்தாந்த சக்கரவர்த்தியாகிய நேமிசந்திராசார்யர் கூறினார். சாமுண்டராயர் உள்ளத்தில் ஏற்பட்ட செருக்கினை போக்கவும் ஆச்சரியகரமான இந்த மாபெரும் சிலையின் பெருமையும் சிறப்பினையும் வெளிப்படுத்துவதற்கும் சாசன யாட்சியான கூஷ்மாண்டினி தேவி, கிழவி வடிவத்தில் வந்து அபிஷேகம் செய்தாள் என்பதையும், ஆசார்யர் விளக்கிக்கூறினார். நேமிசந்திராசார்யரின் கட்டளைக்கிணங்க சாமுண்டராயர் இந்த அதிசய செயலைச்செய்த அக்கிழவியின் திருவுருவத்தைச்செய்து பகவான்பாகுபலியின் படிமைக்கு எதிரில் அமைத்து வியப்பானச் செயல் வரலாறாக அமைய வேண்டுமெனச் செய்தார். அந்த திருவுருவம் இன்றும்கூட 'குல்லிகா அஜ்ஜி' என்னும் பெயரால் காட்சியளிக்கிறது. மலையடிவாரத்தில் இப்பொழுது அமைந்துள்ள கல்யாணி குளம் என்னும் பெயர் வழங்கும் நீர்நிலை அன்று அபிஷேகம் செய்த பால் தேங்கிய குளமே.

ஐம்பத்தேழு (57) அடி உயரமான இந்த மாபெரும் படிமை நிறுவிய காலம் பாரதீய ஜோதிஷ கணக்குப்படி கல்கி சம்வத்சரம் 600 விபவ ஆண்டு சித்திரைத்திங்கள் வளர்பிறை பஞ்சமி ஞாயிற்றுக்கிழமை மிருகசீர நக்ஷத்திரம் கும்ப லக்கனமும் கூடிய நன்நாளாகும். இதற்குச் சரியான ஆங்கில ஆண்டு 981 மார்ச்சுத் திங்கள் 13-ம் நாள் ஆகும். இது அறிஞர்கள் கருத்து.

இந்தப் படிமையின் அமைப்பும் கலை அழகும் அபூர்வமாகும். இந்தச் சிலைக்கு இருபுறங்களிலும் பாம்பின் புற்றுகள் செதுக்கப்பட்டுள்ளன. அப் புற்றுகளின் வாய்புறத்தில் பாம்புகள் தலை நீட்டுவதுபோன்று சித்தரித்துள்ள காட்சியும் மாதவிக் கொடிகள் பாதங்களின் அடிபாகத்திலிருந்து கிளம்பி கால்களையும் கைகளையும் சுற்றிக்கொண்டு

---

கன்னட மொழியில் அஜ்ஜி என்றால் பாட்டி எனப்பொருள்.

புஜம்வரை செல்லும் காட்சியும் முகத்தில் அமைந்த கவர்ச்சி கரமான கலையும் படிமையைத் தரிசிக்கும் மக்களை வியப் புறச் செய்கின்றன. மேலும் இந்தச் சிலையை வடித்த சிற்பியின் திறமையையும் பக்தியையும் பாராட்டாத மக்களே இல்லை. சிலைக்கு ஒருபுறம் பாறையில் பெரிய எழுத்தில் 'சாமுண்டராஜெ கரவியலே' கங்கராஜெ சுத்தாலே கரவியலே' என மராட்டி மொழியில் செதுக்கப்பட்டுள்ளது. 'சாமுண்ட ராயர் இந்த படிமையை நிறுவினார். கங்கராஜன் இப் படிமையின் நான்கு புறங்களிலும் வலம் வருவதற்கு மண்ட பத்தை அமைத்தார் என இதற்குப் பொருள் (கன்னட எழுத் திலும், தமிழ் எழுத்திலும்கூட சாமுண்டராயன் நிறுவினார் என்கிற சொற்கள் செதுக்கப்பட்டுள்ளன).

ஸ்ரீ நேமிசந்திராசார்யர் இப் படிமைக்கு 'கொம்மடஜின' 'தட்சின குக்குடஜின' என்கிற பெயர்களை வழங்கியுள்ளார். சாமுண்டராயர் இல்லத்துப் பெயர் 'கொம்ம'மென்பதாம். அதனால் அவன் இஷ்டக் கடவுளாகிய பாகுபலி சிலைக்கு 'கோம்மடஜினன்' 'கோமடேஸ்வரர்' 'கோம்மடேச' முதலிய பெயர்கள் வைக்கப்பட்டன. மற்றும் பரத மாமன்னனின் வாயிலாக பௌதனபுரத்தில் நிறுவிய படிமை 'குக்குட சர்பங் (கோழிப் பாம்பு)களால் சூழப்பட்டதினால் அது 'குக்குடஜினன்' என அழைக்கப்பட்டது. அதன் நினை வாகவே (தட்சின தேசத்தில்) தென்னிந்தியாவில் நிறுவிய இந்த படிமைக்கு 'தட்சின குக்குடஜின' எனப் பெயர் வழங்கி வருகிறது.

மிகப் பெரிய அளவில் உருவாக்கப்படும் சிலையில் அழகும் நல்ல அமைப்பும், ஆச்சரியகரமான வேலைப்பாடும் அமைவது அறிது, ஒருக்கால் இவை எல்லாம் அமைந்தாலும் அதில் தெய்வீகத் தன்மை பொருந்துவது மிகக் கடினம். அனால் இந்தப் படிமையிலோ விரிவும், அழகும், தெய்வீகத் தன்மையும், ஆச்சரியகரமான சிற்பக் கலையும் ஒருங்கே அமைந்துள்ளது.

இச் சிலையின் அளவு கீழ்வருமாறு :

| | அடி | அங்குலம் |
|---|---|---|
| பாதத்திலிருந்து காதின் அடிபாகம் வரை | 50 | 0 |
| காதின் அடிபாகத்திலிருந்து தலை உச்சிவரை | 6 | 6 |
| பாதங்களின் நீளம் | 9 | 0 |
| பாதங்களின் முன் பாகத்தின் அகலம் | 4 | 6 |
| பாதங்களின் கட்டை விரல் | 2 | 9 |
| பாதங்களின் மேற்புற வட்ட அளவு | 6 | 4 |
| தொடைக்கு மேல் அரைவட்ட அளவு | 10 | 0 |
| நிதம்ப (புட்டத்திலிருந்து காது வரை) | 24 | 6 |
| முதுகெலும்பின் கீழ் பாகத்திலிருந்து காது வரை | 20 | 0 |
| தொப்புள் கீழ் வயிற்றின் சதுர அளவு | 13 | 0 |
| இடுப்பின் சுற்றளவு | 10 | 0 |
| இடுப்பிலிருந்து காது வரை | 17 | 0 |
| கீழ் புஜத்திலிருந்து காது வரை | 7 | 0 |
| ஆள் காட்டி விரல் நீளம் | 3 | 6 |
| கை நடு விரல் நீளம் | 5 | 3 |
| மோதிர விரல் நீளம் | 4 | 7 |
| சுண்டு விரல் நீளம் | 2 | 8 |
| மார்பகத்தின் அகலம் | 26 | 0 |
| கழுத்தின் கீழ் பாகத்திலிருந்து காது வரை | 2 | 6 |
| படிமையின் முழு உயரம் | 57 | 0 |

**சந்திரகிரி விந்தியகிரி :**

ஸ்ரவண பெளிகுளத்திற்கு 'ஜைன்பத்திரி' எனப் பெயர் உண்டு. இங்கு எதிரெதிரே இரண்டு மலைகள் உள்ளன அவை முறையே 'தொட்டபெட்டா', 'சிக்கபெட்டா' அதாவது பெரிய மலை சிறிய மலை என அழைக்கப்படுகின்றன. இவற்றிற்கு விந்தியகிரி சந்திரகிரி எனப் புகழ் பெற்ற பெயர்களும் உள. விந்திய கிரியை இந்திரகிரி என்றும் கூறுகின்றனர்.

**சந்திரகிரி :**

இந்த மலை சமுத்திர மட்டத்திலிருந்து 3053 அடி உயரமாகும் இதன்மீது ஏறக்குறைய 16 ஜினாலயங்கள் உள்ளன. இவற்றில் 'பார்சுவநாத பசதி' 'சந்திரகுப்த பசதி 'சாமுண்டராய பசதி' ஆகிய மூன்றும் மிக முக்கியமானதும் வரலாற்றுச் சிறப்புவாய்ந்ததும் ஆகும். மேலும் இந்த மலை மீது 'பத்திரபாகு குகை' ஒன்றும் உண்டு. இது மிக மிகப் பழமையானது.

கடைசி சுருதகேவலி (ஆகமவாலறிவு பெற்ற மகான்) **பத்திரபாகுஆசார்யர்** தமது பெரிய முனி சங்கத்துடன் உஜ்ஜைன் நகரம் வந்தார். அங்கு ஒருநாள் ஆகாரத்திற்குப் புறப்பட்டபோது ஜினதாஸ் சிரேஷ்டியானவர் நவதாபக்தி யுடன் ஆகார தானம் அளிக்க இவரைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றபோது, இவர் வீட்டில் நுழைந்த உடனே அங்குப் பிறந்து அறுபது நாளே ஆன ஒரு ஆண் குழந்தை போ, போ, என்றது. ஆசார்யர் கேட்டார், 'குழந்தாய்' 'எத்தனை ஆண்டுகளுக்கு' குழந்தை கூறியது, 'பன்னிரண்டு ஆண்டுகளுக்கு! இந்தச் சம்பவம் நிகழ்ந்த பிறகு ஆசார்யர் தமது நிமித்த (காரணத்தை அறியும்) ஞானத்தினால் இந்த மாலவ தேசத்தில் 12 ஆண்டுகள்வரை கடும் பஞ்சம் ஏற்படப்போகிறது என அறிந்தார். அப் பொழுதே தமது சங்கத்திலிருந்த எல்லா முனிவர்களையும் அழைத்து தென் தேசம் (தென்னிந்தியா) செல்ல வேண்டு மென்கிற முடிவைக்கூறிவிட்டார். ஒருசில சிரேஷ்டிகள் வேண்டுதல் பேரில் ராமல்ய, ஸ்தூல பத்ராசார்ய, முதலிய சில முனிபுங்கவர்கள் அங்கேயே தங்கிவிட்டனர். ஆசார்ய பத்திரபாகு 12 ஆயிரம் முனிகளுடன் அங்கிருந்து புறப்பட்டு விட்டார். வடநாட்டிலிருந்து புறப்பட்ட முனி சங்கம் வழியில் உள்ள காடு, மலை, கிராமம், நகரம் ஆகியவற்றை

எல்லாம் கடந்து இந்த மலைமீது வந்து தங்கியது. அப்பொழுது ஆசார்யர் தமது ஆயுள் காலம் நெருங்கி விட்டது என அறிந்து தமது சங்கத்தை அங்கிருந்து வெவ்வேறு இடங்களுக்குச் செல்லும்படிக்கூறி அவர் இங்கேயே தங்கி 'சல்லேகனை' விரதத்தை ஏற்றுக்கொண்டார்.

உஜ்ஜைன் மாநகர மன்னனான சந்திரகுப்த மௌரியன் சில ஆண்டுகளுக்கு முன்பு சில கனவுகளைக் கண்டான். அக் கனவின் பலனை ஆசார்ய பத்திரபாகு முனிவரின் வாயிலாக அறிந்து, விரக்தியடைந்து, திகம்பர முனி தீட்சைப் பெற்று, வேறு எங்கும் செல்லாமல் இருந்தார் குரு வடக்கிருத்தல் விரதத்தைக் கை கொண்ட பிறகு அமர உலகம் யெய்தினார். முனி சந்திரகுப்தர் குருவின் பாத சின்னங்களை அம் மலையிலுள்ள குகையில் பொறிக்க வைத்து அதன் முன் அமர்ந்து குரு பக்தி கொண்டு ஆயுள் முழுதும் ஆத்ம தியானத்தில் ஆழ்ந்து இருந்தார் அவருடைய குரு பக்தியின் சிறப்பினை அறிந்த வன தேவதைகள் அக் காட்டில் ஒரு கிராமத்தை அமைத்து பன்னிரண்டு ஆண்டுகள் வரை அந்த தேவதைகள் துறவியர்களுக்கு ஆகாரம் அளித்து வந்தனர். ஆனால் அமரர்கள்தான் ஆகாரம் அளிக்கிறார்கள் என்பது துறவிகளுக்குத் தெரியாது. பன்னிரண்டு ஆண்டுகள் கடந்த பிறகு துறவியர் சங்கம் அவ்விடத்தைவிட்டு வேறு இடத்திற்குப் புறப்பட்டு விட்டது. அப்பொழுது ஒரு துறவி தனது கமண்டலத்தை மறந்து அங்கேயே விட்டு விட்டுச் சென்றார். சிறிது தூரம் சென்ற பிறகு அவருக்கு தன்னுடைய கமண்டலம் நினைவிற்கு வந்தது. உடனே திரும்பி வந்து அவ்விடத்தைப் பார்த்த போது அங்கு கிராமமாக இருந்த இடம் காடாக காட்சி அளித்தது. அவருடைய கமண்டலம் ஒரு மரக்கிளையில் தொங்கிக் கொண்டிருந்தது. அக் கமண்டலத்தை எடுத்துக் கொண்டு அத் துறவி திரும்பிச் சென்று சங்கத்தையடைந்து தமது குருவிடம் தாம் கண்டவற்றைக் கூறினார். சந்திரகுப்தரின் மகிமையினால்தான் வன தேவதைகள் அவருக்கும்

அவர் முனி சங்கத்திற்கும் ஆகாரம் அளிக்க ஏற்பாடு செய்தனர். என்பது அப்பொழுதுதான் எல்லோருக்கும் தெரிய வந்தது. அமரர்கள் கைகளால் ஆகாரம் ஏற்றுக்கொண்டதற்கு அவர்கள் கழுவாய் ஏற்றுக்கொண்டனர். ஏனெனில் துறவிகள் அமரர்கள் அளிக்கும் உணவை ஏற்கக்கூடாது. இந்த வரலாறு 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டது. பண்டைய பத்திரபாகு குகையும் பாதச் சின்னங்களும் இன்று அங்கு காட்சியளிக்கின்றன.

இந்த மலைமீது 'சந்திரகுப்த பசதி' என்கிற ஒரு கோவிலும் உண்டு. இக் கோவிலைச் சந்திரகுப்தன் கட்டுவித்தான் என்கிற வரலாறும் உண்டு, (சந்திரகுப்தனுடைய பேரன் அசோகன் கட்டுவித்தான்) என்றும் சிலர் கூறுகின்றனர்.) இந்தக் கோவில் சுவற்றின் சன்னலில் 90 சித்திரங்கள் கல்லில் பொறிக்கப்பட்டுள்ளன; இவை ஆசார்ய பத்திரபாகு மற்றும் சத்திரகுப்த மன்னன் வரலாற்றைக் குறிக்கின்றன. இதே மலைமீது சாமுண்டராயனால் கட்டுவித்த ஆலயமும் ஒன்று உண்டு. அது 'சாமுண்டராயபசதி' என அழைக்கப்படுகிறது. இதில் உள்ள ஜினபகவானின் படிமை வரலாற்றினை நேமிசந்திராசார்யர் கோமடசாரம் கர்மகாண்டம் என்னும் நூலில் கூறியுள்ளார். இதுபோன்று மேலும் பல ஆலயங்கள் வரலாற்றினையும் கலை அழகினையும் அகத்தே கொண்டு அமைந்துள்ளன.

இந்த மலைமீது 'சாமுண்டராய பாறை' ஒன்று உண்டு. இதன்மீதிருந்ததுதான் சாமுண்டராயன் தன்னுடைய அம்பை எதிரில் உள்ள விந்தியகிரிக்கு எய்தான் என்று கூறப்படுகிறது.

---

அமரர்கள் அவிரதிகள் அவர்கள் விரதம் ஏற்று அறத்தைக் கடைபிடிக்கும் தன்மை அமரப்பிறவியருக்கு கிடையாது. விரதம் இல்லாதவரிடம் திகம்பர துறவிகள் ஆகாரம் ஏற்கும் மரபு இல்லை.

**விந்தியகிரி :**

இந்த மலை சமுத்திர மட்டத்திலிருந்து 3347 அடி உயரத்திலுள்ளது. நில மட்டத்திலிருந்து இதன் உயரம் 470 அடியாகும். இது வட்ட வடிவமாய் அமைந்துள்ளது, இதன் உச்சிவரை ஏறுவதற்கு 650 படிகள் செதுக்கப்பட்டுள்ளன. இதன் உச்சியில் மண்டபத்தால் சூழப்பட்ட முற்றத்தில் 57 அடி உயரம் உள்ள பகவான் பாகுபலியின் படிமை நின்ற வண்ணம் காட்சி அளிக்கிறது. இந்தப் படிமையை சுற்றியுள்ள மண்டபத்தில் 40 சிலைகள் நின்ற வண்ணம் உள்ளன. இந்த மண்டபத்தின் நுழைவாயில் வெளிப்புறம் 'குல்லிகா அஜ்ஜி'யின் சிலை நிறுவியுள்ள மண்டபத்தின் மேல்புறம் 'பிரம்மதேவயட்ச'ரின் சிலை அமைந்துள்ளது. இந்த மலைமீது 'சித்தபசதி' 'ஆதிநாதபசதி' ஆகிய ஆலயங்களும் உள்ளன. மேலும் அநேக கல்வெட்டுகளும் உள்ளன. இவை இந்தத் திருத்தலத்தின் பண்டைய வரலாற்றினையும் அத்தாட்சிச் சான்றுகளையும் விளக்குகின்றன.

இரண்டு மலைகளின் கீழே ஸ்ரவண பெளிகுளம் கிராமம் இருக்கிறது இங்கு பண்டாரபசதி, சந்திரபிரபபசதி ஆகிய பல ஆலயங்கள் உள்ளன. சாருகீர்த்தி பட்டாரக சுவாமியார் மடமும் உள்ளது. இந்த மடத்தில் பல பண்டைய ரத்தின பிம்பங்களும் உள்ளன. மேலும் பண்டைய ஓலைச் சுவடிகளும் உள்ளன.

இந்தத் திருத்தலத்தின் அருகில் பல ஜினாலயங்களும் உள்ளன. இவை மிகப் பழமையானவை. இவற்றுள் பல ஆலயங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. இங்கு வரும் யாத்திரிகர்கள் கோமட்டகிரி, உம்புஜம், குந்தாத்ரீ, வராங்கம், கார்களா, மூடுபித்ரீ, பிஜாபூர் ஆகிய புனிதத் தளங்களைத் தரிசித்து தமது யாத்திரை முற்று பெற்றதாக கருதுகின்றனர்.

---

ஜேணவிணிம்மிய படிமாவயணம் சவ்வஹ்ஹ சித்த தேவேஹிம்
சவ்வபரமோஹிஜோகிஹிம் திஹப் சோ கோம்மடோ ஜயஉ.

(கோ. கர்மகாண்டம் 969)